

# அமரர் வடிவேல் சுப்பையா ராஜ்குமார்

(இளைப்பாறிய ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்
முன்னாள் கொமர்ஷல் லீசிங் முகாமையாளர்)
அவர்களின்

## சிவப்பதபேறு குறித்த

# நினைவு மலர்

# 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
09 - 04 - 1947

மறைவு
25 - 06 - 2024



## அமரர் வடிவேல் சுப்பையா ராஜ்குமார்

(இளைப்பாறிய ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்
முன்னாள் கொமர்ஷல் லீசிங் முகாமையாளர்)
அவர்கள்

உ

சிவமயம்







கண்டியைப் பிறப்பிடமாகவும்,

திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் வடிவேல் சுப்பையா ராஜகுமார்


**(இளைப்பாறிய ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்**


**முன்னாள் கொமர்ஷல் லீசிங் முகாமையாளர்)**


**அவர்களின் ௩௧ ம் நாள்**



# நினைவுமலர்







# சமர்ப்பணம்!

எங்கள் அன்பின் தெய்வத்தின்
பொன்னடிகட்கு இந்நூல்
சமர்ப்பணம்

எமது குடும்பத்தின்
விடிவெள்ளியாய் விளங்கி
எம்மை அன்புடன் பேணி வளர்த்து
நல்வழிக்காட்டி அறிவு ஒளியூட்டி
எம்மை நன்நிலைக்கும் ஆளாக்கி
அமரத்துவம் அடைந்த எங்கள்
அன்பு தந்தையின் காலடிக்கு
இம்மலரைக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## பஞ்ச தோத்திரம்

### தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழும்சுடர் நற் சோதி மிக்க
உருவே யென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்று
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்லினைநோய் அடையா வண்ணம்
ஆவடு நண்டுறையுறையு மமரரேறே

## திருவாசகம்

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றா ஆழாமற்
காப்பானை ஏத்தாதே
சுழ்கின்றாய் கேடுனக்கச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய் வெள்

## திருவிசைப்பா

*பவளமால் வரையைப் பனிபடர்ந்(து)*
*அனையதோர் படரொளிதரு திருநீறும்*
*குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்*
*துன்றுபொற் குழல்திருச் சடையும்*
*திவள மாளிகை சூழ்தரு*
*தில்லையுள்திரு நடம்புரி கின்ற*
*தவள வண்ணனை நினைதொறும்*
*என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே.*

## திருப்பல்லாண்டு

*ஆரார் வந்தார் அமரர்*
*குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்*
*நாராயணனொடு நான்முகன்*
*அங்கி இரவியும் இந்திரனும்*
*தேரார் வீதியில் தேவர் குழாங்கள்*
*திசையனைத்தும் நிறைந்து*
*பாரார் தொல்புகழ் பாடியும்*
*ஆடியும் பல்லாண்டு கூறுதுமே*

## திருப்புராணம்

*சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்*
*உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தர ரந்நிலையில்*

## திருப்புகழ்

*உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி*
*ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி*
*இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்*
*என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே*
*தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே*
*தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே*
*அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே*
*ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.*

## வாழ்த்துப்பா

*வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்!*
*கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க*
*நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

## மனைவியின் கண்ணீர்

எல்லோரிடமும் அன்பாகவும் பாசமாகவும் பழகும் தன்மை கொண்டவராக திகழ்ந்தீர்கள் அப்பா எல்லோருக்கும் உதவி செய்வதிலும் குறைந்தவர் அல்ல எல்லோரிடமும் நல்ல மனிதர் என்ற பெயரை பெற்றவர் பிள்ளைகளிடமும் அன்பாகவும் பாசமாகவும் இருப்பீர்கள் அப்பா இன்று எங்களை விட்டு போக எப்படி மனம் வந்தது இனி நாங்கள் எப்படி உங்களைப் பிரிந்து இருப்போம் என்று தெரியவில்லை

-உங்கள் பிரிவால் துயவுறும் மனைவி-

## மகளின் உள்ளத் தவிப்பு

**என் அப்பா ஒரு சகாப்தம்!**

*கைகளில் தாங்கிய போது அன்னையாக*
*விரல் பிடித்து வழி நடத்திய போது குருவாக*
*தோளணைத்து ஆறுதல் கூறுகையில் தோழனாக*
*கேட்டதெல்லாம் வாங்கி தந்து, செல்லமாய் என்னை*
*கொஞ்சி வளர்த்த அப்பா!*
*கண்ணீரும் அறியாமல், கஷ்டமும் தெரியாமல்*
*என்னை கண்ணுக்குள் வச்சி வளர்த்த அப்பா!*
*இன்று என் கண்ணீர் துடைப்பதற்கு இல்லை.*
*இன்னும் என்னோடு இருந்திருக்கலாம் சில காலம்!*
*திரும்பி வரமுடியாத தூரத்திற்கு போய்விட்டீர்கள் என்றாலும்*
*மீண்டும் திரும்பி வரமாட்டீர்களா என்று ஏங்கிக் காத்திருக்கும்*

*அன்பு மகள்*
*தர்ஷினி*

## மருமகனின் துயரம்

*அன்பு மாமா!*

*நீங்கள் எனக்கு இன்னொரு தந்தையாகவும் எப்போதும் நல்ல அறிவுறை கூறும் ஆசானாகவும் ஒரு நல்ல வழிகாட்டி யாகவும் இருந்தீர்கள். உங்கள் இழப்பு எனக்கு பேர் இழப்பு. உங்கள் பிரிவை இன்னும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உங்களுடைய இடத்தை யாராலும் நிரப்பவே முடியாது மாமா. உங்கள் பிரிவால் வாடும்*

*மருமகன்*
*ஶ்ரீசங்கர்*

## மகனின் தவிப்பு

*எனது அப்பா எங்களுக்காக வாழ்ந்தவர்! எங்களுக்காக மட்டுமே வாழ்ந்தவர். ஒரு பெண்ணை எப்படி மதிக்க வேண்டும் மற்றும் கை நீட்டி அடிப்பது தப்பு என கண்டித்தவர். எனது அப்பா முதன் முதலில் கண் கலங்கியதை பார்த்த நான் அவர் இறுதி வரை அவ்வாறு கண் கலங்காமல் பார்த்து கொண்டேன் என நான் நினைக்கிறேன். என்னை விட்டு பிரிந்தாலும் நான் வாழும் வரை என் நினைவோடு வாழும் எனது அப்பா! இருந்த போதிலும் நீங்கள் இல்லாமல் நான் தவிக்கிறேன். உங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்கும் உங்களுக்காக வாழ்ந்த உங்கள் மகனின் தவிப்பு இது அப்பா!*

மகன்
நிரோசனன்
I Miss You Appa
Always All Time
I hope you will be with me
My Appa!

## மருமகளின் மனத் துயரம்

*என் அன்பு மாமா! என் மீது நீங்கள் காட்டிய பாசம் என் அப்பாவுக்கும் நிகரானது நீங்கள் என்னை அழைக்கும் குரல் ஓசை என் காதுக்குள்ளே கேட்டுக் கொண்டே இருக்கிறது என்னோடு ஒன்றாக சாப்பிடும் நினைவுகள் உங்களோடு அருகில் அமர்ந்து உங்களின் சிறு வயது கதைகளை கேட்டுக் கொண்டிருக்கும் நினைவுகள் எல்லாம் இனி கிடைக்கப் போவதில்லையே என்ற கவலையோடு உங்கள் கடைசி நேர பிரிவில் உங்களோடு இருந்த அந்த நினைவும் மிகவும் வேதனையை தருகின்றது மாமா உங்கள் இழப்பு மிகவும் தாங்கிக் கொள்ள முடியாத மனவலியை தருகின்றது உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்.*

-I Miss You Mama-
*மருமகள்* - Nila

## மகளின் உருக்கம்

*அப்பா நாங்கள் மீண்டும் உங்களை பார்க்க மாட்டோம் என்று கனவிலும் நினைக்கவில்லை அப்பா. அப்பா இனி யாரை அப்பா! என்று கூப்பிடுவோம். எங்களை விட்டு செல்ல எப்படி மனம் வந்தது உங்களை போன்று அன்பாகவும் மரியாதையாகவும் நகச்சுவையான அப்பா யாருக்கு கிடைக்கும்? இல்லை என்று சொல்லாமல் கேட்பதெல்லாம் வாங்கித் தந்து அன்பாக வளர்த்தீர்கள் கஷ்டம் தெரியாமல் வளர்த்தீர்கள் அப்பா. இன்று எங்களை அநாதையாக விட்டுவிட்டு சென்று விட்டீர்களே அப்பா!*

*அன்பு மகள்*
*சுதர்சினி*

## மருமகனின் கலக்கம்

*மாமா உங்கள் பிரிவை எங்களால் இன்னும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எப்போதும் எங்கள் மீது அன்பாகவும் மரியாதையாகவும் நடப்பீர்கள். உங்கள் பிரிவால் மனம் கலங்கி நிற்கின்றோம் மாமா!*

*மருமகன்*
*கலை*

## மகனின் உருக்கம்

*அப்பா உங்களோடு இருந்த நாட்கள் அது சொர்க்கம்! அதை மீண்டும் அனுபவிக்க முடியாது என்று என்னும் போது என் மனம் வருந்துகிறது அப்பா!*
*தண்ணீர் இல்லாத குளத்தில் தத்தளிக்கும் மீன் போல என் அப்பா இல்லாத உலகத்தில் தவிக்கிறேன் நான்.*

*உங்கள் அன்புக்காக*
*ஏங்கும் மகன்*
*ஜனா*

## பேரப்பிள்ளைகள் கலக்கம்

Dear pappa!

### WHEN I LOST YOU

I wish I could see you one more time,
come walking through the door.....
But I know that is impossible,
I will hear your voice no more

I know you can feel my tears
And you don't want me to cry
Yet my heart is broken because
I can't understand why someone
so precious had to die.

I pray that god will give me strength
And somehow get me through
As I struggle with the heartache
That came When I Lost you

pappa, I am still in shock that you are no more in this world with us. I know your guiding hands will always be on my shoulders forever. I will never forget What you have taught me from my childhood till now. I'll always miss your voice which called me 'Ammachi'. I miss you pappa every single day. I know you are watching over me in heaven look down on me from heaven. I know one day I will make you proud of me, As I say goodbye to his physical presence, I am comforted knowing my pappa's spirit will always be a part of me. I love you pappa. I'm so proud to be your Grand daughter.

உங்களை போல ஒரு பப்பா யாருக்கும் கிடைத்திருக்க மாட்டார் என்று நான் தைரியமாக சொல்லுவேன். நீங்கள் என்னை கொஞ்சிய ஞாபகம் என் உள்ளத்தில் இன்றுவரை இருக்கிறது. என்னை பாட்டு பாடி உரங்கவைத்த உங்கள் குரல் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. என்னை மூத்த பேத்தி என்று நீங்கள் ஊர் முழுதும் சொல்லி பெருமை பட்டது போல நானும் 'இவர் என் பப்பா' என சொல்லி பெருமைப்படுகிறேன். நீங்கள் என்னுடன் இல்லை என்று நினைக்கும் போதெல்லாம் உங்கள் நினைவுகள் மட்டும் என்னோடு நிற்கிறது. மரணம் எங்களை பிரித்திருந்தாலும் மறக்க முடியுமா உங்களுடன் வழ்ந்த நாட்களை. மீண்டும் எனக்கு ஒரு உறவாக நீங்கள் வருவீர்களா என காத்துக்கொண்டிருக்கும் நான்...

-உங்கள் அம்மாச்சி-

பிரணீதா


பப்பா ஏன் எங்களை விட்டு சென்றீர்கள். எவ்வளவு நாங்கள் அன்பாகவும் சந்தோஷமாகவும் வீட்டில் இருந்தோம். இனி திரும்பிக் கிடைக்காத உங்கள் அன்பு எந்த நேரமும் என்னை தேடுவீங்க பப்பா உங்களை போன்று யாரும் என்னில் அன்பாக இருக்கமாட்டார்கள். என்ட செல்ல அப்பன் எங்க என்று கேட்பீங்கள் பப்பா உங்களை நிறைய Miss பண்றன்.

K.Harish

பப்பா எங்களை விட்டு எங்கு சென்றீர்கள். நான் அங்கு இருக்கும் போது அப்பு அப்பு... என்று மிகவும் அன்பாக கூப்பிடுவீங்கள். நான் கனடாவுக்கு வந்த பிறகு என்னை அப்படி கூப்பிட யாருமே இல்லை. நான் School விட்டு வரக்குல எல்லாம் பார்த்து கொண்டு இருப்பீங்க. Class க்கு செல்லும் போது எத்தனை மணிக்கு திரும்பி வருவீர்கள் என்று கேட்பீங்கள். எங்களை மிகவும் அன்பாக பார்த்து கொள்வீர்கள். நான் கேட்பதெல்லாம் நீங்களும் கேட்பீர்கள். நீங்கள் எப்போதும் சாப்பிட்டியா அப்பா என்று அன்பாக கேட்பீங்க. உங்களைப் போல் என்னை செல்லமாகவும் அன்பாகவும் கொஞ்சுவதற்கு யாரும் இல்லை பப்பா. இனி உங்களைப் பார்க்க முடியாது கதைக்க முடியாது என்று நினைக்கும் போது அழுகை அழுகையாக வருகிறது.

உங்கள் அன்பு பேரன்
சக்ஷயன்

# கௌரிக் காப்பு



## விநாயகர் துதி


முன்னின்று செய்யுள் முறையாயப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாரமற் கா

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டுவீர்
நெறியறியாத திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியளே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளும்மா
வீடுசெழிக்கவென்றே விழைகாப்பு அருளும்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளும்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளும்மா
பிள்ளையற்றவர்க்குப் பெருங்காப்பு அருளும்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வந்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருள
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவிடும்
தொடர்ந்து அணிவொர்க்குத் தொட்டதெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தணச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக் கட்விட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழும்சுடரே காளியுன்னைக் காண்கின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிபோலே கனன்றிவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலெ
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொற்றற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமதை
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்குச்
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
எச்சகத்தி லுள்ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
எச்சக்தி யெல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளயரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்து கௌரியே காப்பருளும்.

**திருச்சிற்றம்பலம்**



# கந்தர்சஷ்டி கவசம்



**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்! நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

*சஷ்டியை நோக்க சரவண பவனார்*
*சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்*
*பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை*
*கீதம் பாடக் கிண்கிணி ஆட*
*மைய நடஞ்செயும் மயில்வா கனனார்*
*கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து*
*வரவர வேலா யுதனார் வருக!*
*வருக வருக மயிலோன் வருக!*
*இந்திரன் முதலா எண்டிசை போற்ற*
*மந்திர வடிவேல் வருக வருக!*
*வாசவன் மருகா வருக வருக!*
*நேசக் குறமகள் நினைவோன் வருக!*
*ஆறு முகம்படைத்த ஐயா வருக!*
*நீறிடும் வேலவன் நித்தம் வருக!*
*சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!*
*சரவண பவனார் சடுதியில் வருக*
*சரவண பவச ரரரர ரரர*
*ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி*
*விணபவ சரவண வீரா நமோ நம*
*நிபவ சரவண நிறநிற நிறென*
*வசர வணப வருக வருக*

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுட சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி

*டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு*
*டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு*
*விந்து விந்து மயிலோன் விந்து*
*முந்து முந்து முருகவேல் முந்து*
*என்றனை ஆளும் ஏரகச் செல்வ!*
*மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்*
*லாலா லாலா லாலா வேசமும்*
*லீலா லீலா லீலா விநோதனென்று*
*உன்திரு வடியை உறுதிஎன் றெண்ணும்*
*என்தலை வைத்துன் இணையடி காக்க!*
*என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!*
*பன்னிரு விழியால் பாலனைக் காக்க!*
*அடியேன் வதனம் அழகுவேல் காக்க!*
*பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!*
*கதிர்வேல் இரண்டும் கண்ணிணைக் காக்க!*
*விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!*
*நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!*
*பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க!*
*முப்பத் திருபல் முனைவேல் காக்க!*
*செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!*
*கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!*
*என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!*
*மார்பை இரத்தின வடிவேல் காக்க!*
*சேரிள முலைமார் திருவேல் காக்க!*
*வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!*
*பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!*
*அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!*
*பழுபதி னாறும் பருவேல் காக்க!*
*வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!*
*சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!*
*நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!*

ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்கத் தாக்க தடையறத் தாக்க!
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ரங்கம்

ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பீரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமு டன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளி
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமு டன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன்எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டால் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழுவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!

திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்.



# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்



| | | |
|---|---|---|
| *ப்ரஹ்மமுராரி* | *ஸுரார்ச்சித* | *லிங்கம்* |
| *நிர்மல பாஷித* | *சோபித* | *லிங்கம்* |
| *ஜன்மஜ துக்க* | *விநாசக* | *லிங்கம்* |
| *தத் ப்ரணமாமி* | *ஸதாசிவ* | *லிங்கம் (01)* |
| | | |
| *தேவமுனி ப்ரவா* | *ரார்ச்சித* | *லிங்கம்* |
| *காம தஹன* | *கருணாகர* | *லிங்கம்* |
| *ராவண தர்ப்ப* | *விநாசக* | *லிங்கம்* |
| *தத் ப்ரணமாமி* | *ஸதாசிவ* | *லிங்கம் (02)* |
| | | |
| *ஸர்வஸுகந்த* | *ஸுலேபித* | *லிங்கம்* |
| *புத்தி விவர்த்தன* | *காரண* | *லிங்கம்* |
| *ஸித்த ஸுராஸுர* | *வந்தித* | *லிங்கம்* |
| *தத் ப்ரணமாமி* | *ஸதாசிவ* | *லிங்கம் (03)* |
| | | |
| *கனக மஹாமணி* | *பூஷித* | *லிங்கம்* |
| *பணிபதி வேஷ்டித* | *ஸோபித* | *லிங்கம்* |
| *தக்ஷ ஸுயஜ்ஞ* | *விநாசக* | *லிங்கம்* |
| *தத் ப்ரணமாமி* | *ஸதாசிவ* | *லிங்கம் (04)* |


குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸேபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (05)

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (06)

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (07)

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் (08)

லிங்காஷ்டக மிதம் புண்யம்
யஹ் படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி
சிவேந ஸஹ மோததே



# திருவெம்பாவை

*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்*
*சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்*
*மாதே வளருதியோ வன் செவியோ நின்செவிதான்*
*மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்*
*வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து*
*போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங் இங்ஙன்*
*ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே*
*ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்* **1**

*பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம்*
*பேசும்போ தெப்போது இப்போதார் அமளிக்கே*
*நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்*
*சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி*
*ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்*
*கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்*
*தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்*
*ஈசனார்க கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.* **2**

*முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்*
*அந்தனா னந்த னமுதனெ்ன் றள்ளூறித்*
*தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்*
*பத்துடையீ ரீசன் பழ அடியீர் பாங்குடையீர்*
*புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ*
*எத்தோநின் அன்புடைமை யெல்லோ மறியோமோ*
*சித்த மழகியார் பாடாரோ நம்சிவனை*
*இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்* **3**

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லோரும் வந்தாரோ?
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலோ ரெம்பாவாய் 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலுாறு தேன்வாய்ப் படிறீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் 5

மானே நீ நன்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு ன்வாய்திறவாய்
ஊனெ உருகாய் உனக்கே உறுமெமெங்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.6

*அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்*
*உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்*
*சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்*
*தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்*
*என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்*
*சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ*
*வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்*
*என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.* **7**

*கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்*
*ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்*
*கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை*
*கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ*
*வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்*
*ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ*
*ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை*
*ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்.* *8*

*முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்*
*உன்னடி யார்தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து*
*சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்*
*இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையுமிலோமேலோ ரெம்பாவாய்* **9**

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோரெம்பாவாய். **10**

மொய்யார் தடம்பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழற்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறு மருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முயந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையலோ ரெம்பாவாய். **11**

ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீராடலோ ரெம்பாவாய். **12**

*பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்*
*அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்*
*தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்*
*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த*
*பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்*
*சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்*
*கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்*
*பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.13*

*காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்*
*கோதை குழலாட வண்டின் குழாமாடச்*
*சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி*
*வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்*
*சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி*
*ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்*
*பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்*
*பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14*

*ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்*
*சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர*
*நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்*
*பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைதான்பணியாள்*
*பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்*
*ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்*
*வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி*
*ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.15*

*முன்னிக் கடலைச்சுருக்கி யெழுந்துடையாள்*
*என்னத்திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்*
*மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்*
*பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி திருப்புருவம்*
*என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்*
*தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு*
*முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே*
*என்னைப் பொழியாய் மழையோலோ ரெம்பாவாய். **16***

*செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்*
*எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்*
*கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி*
*இங்குநம் இலலங்கள் தோறும் எழுந்தருளிச்*
*செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை*
*அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை*
*நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்*
*பங்கயப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். **17***

*அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்*
*விணணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்*
*கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்*
*தண்ணார் ஒளிமழுங்கி த்தாரகைகள் தாமகலப்*
*பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்*
*விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்*
*கண்ணாரமுதமாய் நின்றான் கழல்பாடிப்*
*பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்*
***18***

*உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று*
*அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன்று ரைம்போம்கோள்*
*எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க*
*எங்கை உனக்கெல்லா தெப்பணியும் செய்யற்க*
*கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிடுலன் ஞாயி றெமக்கலோ ரெம்பாவாய். 19*

*போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்*
*போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்*
*போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றி யெல்லா வுயிர்கும் போகமாம் பூங்ககழல்கள்*
*போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்*
*போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்*
*போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்*
*போற்றி யாம்மார்கழி நீராடேலோ ரெம்பாவாய். 20*



குமர குருபர சுவாமிகள்

அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை



## வெண்பா

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விற்கும் என் அம்மை - தூய**
**உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே**
**இருப்ப ளிங்கு வாராதிடர்**

**வெண்டா மரைக்கன்றி நின்பதந்**
**தாங்கவென் வெள்ளையுள்ளத்**
**தண்டா மரைக்குத் தகாது கொலோ?**
**சகம் ஏழும் அளித்து**
**உண்டா உறங்க ஒளித்தான் பித்**
**தாகவுண் டாக்கும் வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே!**
**சகல கலாவல்லியே!** (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலா வல்லியே (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே! (3)

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்!
வட நூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! (4)

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே!
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! (5)

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! (6)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலா வல்லியே! (7)

சொல் விற்பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல் வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல் விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! (10)

# திருப்பள்ளியெழுச்சி

*போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே*
*புலர்ந்தது பூம் கழற்கு இணை துணை மலர் கொண்டு*
*ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்*
*எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்*
*சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்*
*திருப்பெருந்துறை உறை சிவபெருமானே*
*ஏறு உயர் கொடி உடையாய் உனை உடையாய்*
*எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (1)*

*அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்*
*அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்*
*கருணையின் சூரியன் எழஎழ நயனம்*
*கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்*
*திரள் நிரை அறுபதம் முரல்வன இலை ஓர்*
*திருப்பெருந்துறை உறை சிவபெருமானே*
*அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே*
*அலை கடலே பள்ளி எழுந்தருளாயே. (2)*

*கூவின பூங் குயில் கூவின கோழி*
*குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்*
*ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து*
*ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்*
*தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்*
*திருப்பெருந்துறை உறை சிவபெருமானே*
*யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்*
*எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (3)*

இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒரு பால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒரு பால்
சென்னியின் அஞ்சலி கூப்பினர் ஒரு பால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டு கொண்டு இன் அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (4)

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. (5)

பப்புஅற வீடு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புஉறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (6)

அது பழச் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்
இது அவன் திரு உரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (7)

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செம் தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. (8)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்ட
விழுப்பொருளே உன தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண் அகத்தே நின்று களி தருதேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (9)

*புவனியில் போய்ப் பிறவாமையின் நாள்தாம்*
*போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி*
*சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்*
*திருப்பெருந்துறை உறைவாய் திருமாஆம்*
*அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்*
*படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும்நீயும்*
*அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்*
*ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. (10)*



# பிள்ளையார் அகவல்



சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பாய்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையில் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட்ட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளெ சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

**திருவாசகச் சிறப்பு**

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம் என்னுந் தேன்.**

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஒ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)



# திருப்பொற்சுண்ணம்

*தில்லையில் அருளியது - ஆனந்த மனோலயம்*

*திருச்சிற்றம்பலம்*

*முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி*
*முளைக்குடந் தூபம்நல் தீபம் வைம்மின்*
*சத்தியும் சோமியும் பார்மகளும்*
*நாமக ளோடுபல் லாண்டிசைமின்*
*சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்*
*கங்கையும் வந்து கவரி கொண்மின்*
*அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி*
*ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1*

*பூவியில் வார்சடை எம்பிராற்குப்*
*பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்*
*மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்*
*வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்*
*கூவுமின் தொண்டர் புறம்நிலாமே*
*குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்*
*தேவியுந் தானும் வந்தெம்மையாளச்*
*செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2*

*சுந்தர நீறணிந் தும்மெழுகித்*
*தூயபொன் சிந்தி நிதிபரப்பி*
*இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்*
*எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்*
*அந்தரர் கோன் அயன் றன்பெருமான்*
*ஆழியான் நாதன்நல் வேலன் தாதை*
*எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு*
*ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3*

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்ப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பலவோச்சு வார் பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
முலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

*முத்தணி கொங்கைகள் ஆட ஆட*
*மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்*
*சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்*
*செங்கயற் கண்பனி ஆட ஆடச்*
*பித்தெம் பிரானொடும் ஆட ஆடச்*
*பிறவி பிறரொடும் ஆட ஆட*
*அத்தன் கருணையொடு ஆட ஆட*
*ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **10***

*மாடு நகைவாள் நிலாவெறிப்ப*
*வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்*
*பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்*
*பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்*
*தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்*
*சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி*
*ஆடுமின் அம்பலத் தாடி னானுக்கு*
*ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **11***

*மையமர் கண்டனை வான நாடர்*
*மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை*
*ஐயனை ஐயர்பி ரானை நம்மை*
*அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்*
*பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்*
*போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்*
*பையர வல்குல் மடந்தை நல்லீர்*
*பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **12***

*மின்னிடைச செந்துவர் வாய்க்கருங்கண்*
*வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்*
*என்னுடை யாரமு தெங்களப்பன்*
*எம்பெரு மானிம வான்மகட்குத்*
*தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்*
*தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்*
*பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்*
*பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. **13***

*சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்*
*தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்*
*செங்கனி வாயித ழுந்துடிப்பச்*
*சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்*
*கங்கை இரைப்ப அராவிரைக்குங்*
*கற்றைச் சடைமுடி யான்க ழற்கே*
*பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்*
*பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. **14***

*ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை*
*நாடற் கரிய நலத்தை நந்தாத்*
*தேனைப் பழச்சுவை ஆயினானைச்*
*சித்தம் புகுந்துதித் திக்க வல்ல*
*கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட*
*கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்*
*பானல் தடங்கண் மடந்தை நல்லீர்*
*பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. **15***

*ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு*
*ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்*
*தேவர் கனாவிலுங் கண்டறியாச்*
*செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்*
*சேவகம் ஏந்திய வெல் கொடியான்*
*சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்*
*சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்*
*செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே.* ***16***

*தேனக மாமலர்க் கொன்றை பாடிச்*
*சிவபுரம் பாடித் திருச்சடைமேல்*
*வானக மாமதிப் பிள்ளை பாடி*
*மால்விடை பாடி வலக்கை யேந்தும்*
*ஊனக மாமழுச் சூலம் பாடி*
*உம்பரும் இம்பரும் உய்ய வன்று*
*போனக மாகநஞ் சுண்டல் பாடிப்*
*பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.* ***17***

*ஆயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி*
*அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்*
*கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்*
*காலனைக் காலால் உதைத்தல் பாடி*
*இயைந்தன முப்புரம் எய்தல் பாடி*
*ஏழை அடியோமை ஆண்டு கொண்ட*
*நயந்தனைப பாடிநின் றாடி யாடி*
*நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.* ***18***

*வட்ட மலர்க்கொன்னைற மாலை பாடி*
*மத்தமும் பாடி மதியும் பாடிச்*
*சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்*
*சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்*
*கட்டிய மாசுணக் கச்சை பாடிக்*
*கங்கணம் பாடிக் கவித்தகைம் மேல்*
*இட்டுநின் றாடும் அரவம் பாடி*
*ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19*

*வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு*
*மேய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்*
*சோதியு மாயிருள் ஆயினார்க்குத்*
*துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்*
*பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்*
*பந்தமு மாய்வீடும் ஆயினாருக்கு*
*ஆதியும் அந்தமும் ஆயினார்க்க*
*ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20*


# செவ்வாய் பகவான்ஸ்துதி

ஓம் அவந்தி தேசாதிபனே போற்றி
ஓம் பாரர்வாஜ வம்சவா போற்றி
ஓம் முருகனின் உருவே போற்றி
ஓம் மேஷ ரசிப் பிரியனே போற்றி
ஓம் விருச்சகத்திக் இருப்பாய் போற்றி
ஓம் தென் முகத்தவனே போற்றி
ஓம் தேவியின் பிரியனே போற்றி
ஓம் பூமியிள் புதல்வனே போற்றி
ஓம் சதோதரகரனெ போற்றி
ஓம் குஜனே போற்றி

# நன்றி நவிலல்

எமது வாழ்விற்கு ஒளியும் வளமும் தந்து எம்மை இனிதே இவ்வுலகில் வாழவைத்த எமது குடும்பத்தின் அளையாவிளக்கு அமரர். திரு. வடிவேல் சுப்பையா ராஜ்குமார் அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அவரது இறுதிச்சடங்குகளில் நேரில் கலந்து கொண்டும், இரங்கல் செய்தி அனுப்பி வைத்தும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும் இறுதி நேரத்தில் அவருடன் கூட நின்று கடைசிவரை அவருக்கு உதவியளித்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அவரது பூதவுடலுக்கு மலர்வலயம் சாத்தியவர்கள் அனைவருக்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகள். மேலும் யாருக்காவது நன்றி கூற தவறி இருப்பின் அவர்களுக்கும் எமது மன நிறைவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தார்



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

ART Printers : 0776566173